

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (18.9.2024) உடல்நலக்குறைவால் காலமான முன்னாள் அமைச்சர் க.சுந்தரம் அவர்களின் மீஞ்சூரிலுள்ள இல்லத்திற்கு நேரில் சென்று, அவரது உடலுக்கு மலர்மாலை வைத்து அஞ்சலி செலுத்தினார். உடன் நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி., உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி, கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர். காந்தி, அந்தியூர் செல்வராஜ் எம்.பி., சட்டமன்ற உறுப்பினர்கள் சா.மு.நாசர், மாதவரம் எஸ்.சுதர்சனம், கோவிந்தராஜன், துரை சந்திரசேகர், ஆ.கிருஷ்ணசாமி ஆகியோர் உள்ளனர்.

### தி.மு.க. ஆதிதிராவிடர் நலக்குழு மாநில தலைவர்

# முன்னாள் அமைச்சர் க.சுந்தரம் மறைவு!

திருவள்ளூர், செப். 21-

திருவள்ளூர் கிழக்கு மாவட்டம், பொன்னேரி தொகுதி, மீஞ்சூர் ஒன்றியம், மீஞ்சூர் பேரூரில் வசித்து வந்த மாநில ஆதிதிராவிடர் நலக்குழு அணித் தலைவர் முன்னாள் அமைச்சர் க.சுந்தரம் (வயது:76) உடல்நலக் குறைவினால் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்தார். சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் (18.09.2024 புதன்கிழமை) மாலை 3.00 மணியளவில் மறைவெய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

## இறுதி ஊர்வலம் நடைபெற்றது!

மறைந்த க.சுந்தரம் மீஞ்சூர் ஒன்றியத்தில் ஒன்றிய பிரதிநிதியாக, ஒருங்கிணைந்த மீஞ்சூர் ஒன்றிய கழக செயலாளராக, ஒருங்கிணைந்த செங்கல்பட்டு மாநில பொதுக்குழு உறுப்பினராக, மாநில கழக துணைப் பொதுச் செயலாளராக, கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினராகவும், கழக மாநில ஆதிதிராவிட நலக்குழு அணி செயலாளராகவும், தற்பொழுது கழக மாநில ஆதிதிராவிட நலக்குழு அணி தலைவராகவும் பல்வேறு கழக பொறுப்புகள் வகித்து தலைவர் கலைஞரின் நம்பிக்கை பெற்ற தொண்டராக 1989-1991 ஆம் ஆண்டு பொன்னேரி சட்டமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டு தலைவர் கலைஞர் அமைச்சரவையில் ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சராக பணியாற்றினார்.

பின்னர் மீண்டும் பொன்னேரி சட்டமன்ற தொகுதியில் 1996 ஆண்டு சட்டமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டு கழகத் தலைவர் கலைஞர் அமைச்சரவையில் பால்வளத்துறை அமைச்சராக பொறுப்பு ஏற்று தலைவரின் நம்பிக்கைப் பெற்றவர்.

கழகம் அறிவித்த அனைத்து போராட்டங்களிலும் ஆர்ப்பாட்டங்களிலும் பங்கேற்று பலமுறை சிறை சென்று உள்ளார். கழகத்தில் சிறப்பாக அவர் ஆற்றிய பணியை பாராட்டி 2023 ஆம் ஆண்டு வேலூரில் நடைபெற்ற முப்பெரும் விழாவில் தமிழக முதல்வர் தளபதி அவர்களின் கரங்களால் அறிஞர் அண்ணா விருது பெற்றவர்.

மறைந்த க.சுந்தரம் அவர்களுக்கு க.சு.எழில் என்ற மனைவியும், க.சு. செந்தில், க.சு.தமிழ்உதயன், க.சு.தமிழ்பிரியன் ஆகிய மூன்று மகன்களும் உள்ளனர். க.சு.தமிழ்உதயன் தற்போது மீஞ்சூர் பேரூர் கழகச் செயலாளராக கழக பணியாற்றி வருகிறார்.

மறைந்த முன்னாள் அமைச்சர் க.சுந்தரம் அவர்களின் இறுதி ஊர்வலம் நேற்று (19-09- 2024 - வியாழக்கிழமை) மாலை 3.00 மணியளவில் மீஞ்சூரில் நடைபெற்றது.

### கழகப் பணியிலும் -

# மக்கள் பணியிலும் தம்மை முழுமையாக அர்ப்பணித்துக் கொண்டவர்!

## முன்னாள் அமைச்சர் க.சுந்தரம் மறைவுக்கு

## கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

**சென்னை, செப்.20–**

**''கழகப் பணியிலும் மக்கள் பணியிலும் தம்மை முழுமையாக அர்ப்பணித்துக் கொண்டவர் முன்னாள் அமைச்சர் க.சுந்தரம் அவர்கள்'' என்று அவரது மறைவு குறித்து கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள இரங்கல் செய்தியில் கூறியுள்ளார்.**

திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆதிதிராவிடர் நலக்குழுத் தலைவரும் முன்னாள் அமைச்சருமான க.சுந்தரம் அவர்களின் மறைவையொட்டி தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் இரங்கல் செய்தி வருமாறு :-



திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆதிதிராவிடர் நலக்குழுத் தலைவரும் முன்னாள் அமைச்சருமான க.சுந்தரம் அவர்கள் மறைந்த செய்தியறிந்து மிகவும் வேதனையடைந்தேன்.

க.சுந்தரம் அவர்கள் பொன்னேரி சட்டமன்றத் தொகுதியின் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு அப்பகுதி மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர். முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் அமைச்சரவையில் ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சராகவும், பால்வளத்துறை அமைச்சராகவும் திறம்படப் பணியாற்றியவர். கழகத்தின் துணைப் பொதுச் செயலாளர் உள்ளிட்ட பல்வேறு பொறுப்புகளை வகித்த க.சுந்தரம் அவர்கள், கழகம் அறிவித்த போராட்டங்கள் அனைத்திலும் பங்கேற்ற தீரமிகு செயல்வீரர். தலைவர் கலைஞர்மீதும் என்மீதும் மிகுந்த பற்றும் பாசமும் கொண்டவர்.

கடந்த 2022ஆம் ஆண்டு ஜூன் மாதம் மீஞ்சூரில் உள்ள அவரது இல்லத்துக்குச் சென்று அவரது உடல்நிலை குறித்துக் கேட்டறிந்த காட்சிகள் இப்போதும் என் நெஞ்சைவிட்டு அகலவில்லை. கடந்த ஆண்டு வேலூரில் நடைபெற்ற கழக முப்பெரும் விழாவில் க.சுந்தரம் அவர்களது கழகப் பணிகளைப் பாராட்டி அறிஞர் அண்ணா விருதினையும் வழங்கியிருந்தேன்.

கழகப் பணியிலும், மக்கள் பணியிலும் தம்மை முழுமையாக அர்ப்பணித்துக் கொண்டு செயல்பட்ட க.சுந்தரம் அவர்களது மறைவு பேரிழப்பாகும்.

அன்னாரை இழந்து தவிக்கும் அவரது குடும்பத்தினருக்கும் திருவள்ளூர் மாவட்ட மக்களுக்கும் கழக உடன்பிறப்புகளுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தமது இரங்கல் செய்தியில் கூறியுள்ளார்.

### ஜப்பான் - டோக்கியோவில்

# தந்தை பெரியார் - பேரறிஞர் அண்ணா பிறந்தநாள் விழா!

## திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி - எம்.எம்.அப்துல்லா எம்.பி. பங்கேற்பு!

டோக்கியோ, செப்.20-

செப்டம்பர் 15 ஆம் தேதி, ஜப்பான் நாட்டின் டோக்கியோ நகரில் கலைஞர் நூற்றாண்டு நிறைவு விழா மற்றும் தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா பிறந்த விழா, திராவிட முன்னேற்ற கழகத்தின் அயலக அணி ஜப்பான் சார்பாக பிரமாண்டமாக கொண்டாடப்பட்டது.

விழாவில் திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அவர்கள் 'பெரியாரின் சமூக நீதி' என்கிற தலைப்பில் பெரியாரின் கருத்தியல், 'சமூக நீதியில் திராவிட இயக்கத்தின் பங்கு' பற்றி சிறப்புரையாற்றினார்.

அயலக அணி செயலாளர், மாநிலங்களவை உறுப்பினர் எம்.எம் அப்துல்லா 'அண்ணா கண்ட கனவு' என்கிற தலைப்பில் அண்ணாவின் கனவு பற்றியும் அதை தொடர்ந்து கலைஞர் அவர்கள் எப்படி அதை நிறைவேற்றினார், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் எப்படி அதை தொடர்கிறார் என்பது பற்றியும் சிறப்புரையாற்றினார்.

ஏராளமான பெண்களும் குழந்தைகளும் கலந்து கொண்ட விழாவில் ஜப்பானிய பறை ஆசிரியர் குரோகவா சான் அவர்கள் மற்றும் அவருடைய மாணவிகள் பறை இசைத்து விழாவை சிறப்பித்தனர். 'அவர்தான் பெரியார்' மற்றும், 'காஞ்சியிலே ஒரு புத்தன் பிறந்தான்' என்கிற அறிஞர் அண்ணா அவர்கள் பற்றிய பாடலை பிரின்ஸ் என்னாரெசு பெரியார் பாட, கவின் செந்தில்குமார் மிருதங்கம் வாசித்து நிகழ்வை தொடங்கினர்.

விழாவை தி.மு.க. ஜப்பான் அயலக அணியை சார்ந்த நிர்வாகிகள் குன்றாளன், ரா.செந்தில் குமார், கமலக்கண்ணன் மற்றும் கோவிந்த பாசம் ஏற்பாடு செய்திருந்தனர்.

### பிரான்ஸ் தலைநகர் பாரிஸ் நகரில்

# தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக அரங்கம்!

## இந்தியத் தூதர் ஜாவத் அஷ்ரப் திறந்து வைத்தார்!

பாரீஸ், செப். 20-

பிரான்ஸ் நாட்டின் தலைநகரான பாரிஸ் நகரில் நடைபெற்று வரும் ஐஃப்டிஎம் டாப் ரேசா 2024 (IFTM TOP RESA 2024) சுற்றுலா வர்த்தக கண்காட்சியில் அமைக்கப்பட்டுள்ள தமிழ்நாடு சுற்றுலாத் துறையின் அரங்கினை சுற்றுலா ஆணையர் மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக மேலாண்மை இயக்குநர் சி.சமயமூர்த்தி, முன்னிலையில், பிரான்ஸ் நாட்டிற்கான இந்திய தூதர் ஜாவத் அஷ்ரப் 17.9.2024 அன்று திறந்து வைத்தார்.

தமிழ்நாடு முதலமைச்சர் சிறப்பான நடவடிக்கைகளால் தற்போது, இந்தியாவிலேயே சுற்றுலாத் துறையில் முதன்மை மாநிலமாக தமிழ்நாடு விளங்கி வருகின்றது. சுற்றுலாவை மேம்படுத்தும் வகையில் சர்வதேச செஸ் ஒலிம்பியாட் போட்டி, சர்வதேச அலைச்சறுக்கு போட்டி உள்ளிட்ட பல்வேறு போட்டிகள் மாமல்லபுரத்தில் நடத்தப்பட்டு வருகின்றன. இதன் காரணமாக மாமல்லபுரம் உலகளவில் முக்கியத்துவம் பெற்று வெளிநாட்டவர்களால் அதிக அளவில் பார்வையிடப்படும் சுற்றுலாத் தலமாக விளங்கி வருகின்றது. தற்போது தீவுத் திடலைச் சுற்றி நடைபெற்ற ஃபார்முலா 4 சாலை கார் பந்தயம் சென்னை நகரின் பெயரை உலக விளையாட்டு ரசிகர்களின் மனதில் நீங்காத இடம் பெறச் செய்தது டன், தமிழ்நாட்டிற்கு வெளிநாட்டு சுற்றுலா பயணிகள் அதிக அளவில் வருவதற்கான வாய்ப்பினை ஏற்படுத்தியுள்ளது. தஞ்சாவூர் பெரிய கோவில், ஊட்டி மலைரயில், கொடைக்கானல், முதுமலை சரணாலயம் உள்ளிட்ட பலதரப்பட்ட சுற்றுலாத்தலங்கள் தமிழ்நாட்டிற்கு உலகம் முழுவதும் உள்ள சுற்றுலா பயணிகளை ஈர்த்து வருகின்றன.

தமிழ்நாடு சுற்றுலாத் துறை வெளிநாட்டு மற்றும் வெளிமாநில சுற்றுலா பயணிகளை கவரும் வகையில் தமிழ்நாடு சர்வதேச பலூன் திருவிழா, சர்வதேச பட்டம் விடும் திருவிழா, சென்னை திருவிழா, மாமல்லபுரத்தில் இந்திய நாட்டிய விழா உள்ளிட்ட பல்வேறு விழாக்களை நடத்தி வருகின்றது.

தமிழ்நாட்டில் உள்ள பழமையான சுற்றுலாத் தலங்கள், கோவில்கள், இயற்கை எழில் கொஞ்சும் மலைகள், நீர்வீழ்ச்சிகள், கடற்கரைகள் குறித்த கழுகுக்கண் பார்வை (TOP ANGLE VIEW) அனுபவத்தையும், சுற்றுலா பயணிகள் நேரில் சென்று பார்வையிட்டதைப் போன்ற அனுபவங்களையும் தரும் வகையிலான குறும்படங்கள் உலகமெங்கும் உள்ள சுற்றுலா பயணிகளை எளிதில் சென்றடையும் வகையில் தமிழ்நாடு சுற்றுலாத்துறை யின் யூடியூப், பேஸ்புக், எக்ஸ் (டிவிட்டர்), இன்ஸ்டாகிராம் உள்ளிட்ட பல்வேறு சமூக வலைதளங்கள் மூலமாக தொடர்ந்து வெளியிடப்பட்டு வருகின்றன.

அதிக அளவில் வெளிநாட்டு சுற்றுலா பயணிகளை தமிழ்நாட்டிற்கு ஈர்ப்பதற்காக வெளிநாட்டு சுற்றுலா ஏற்பாட்டாளர்கள் பங்கு பெறும் இந்திய அளவிலான பயண சுற்றுலா சந்தைகள், வெளிநாடுகளில் நடைபெறும் புகழ்பெற்ற பயண சுற்றுலா வர்த்தக சந்தைகள் மற்றும் கண்காட்சிகளில் தமிழ்நாடு சுற்றுலாத்துறையின் அரங்கம் அமைக்கப்பட்டு சுற்றுலா சிறப்புகளை தெரிவிக்கும் குறும்படங்கள் திரையிடப்பட்டும், புத்தகங்கள், சிறு கையேடுகள் ஆகியவை பார்வையாளர்களுக்கு வழங்கப்பட்டும் கவன ஈர்ப்பு செய்யப்படுகின்றது.

இதுபோன்ற முயற்சிகளின் காரணமாக கொரோனாவிற்கு பிறகு 2021 ஆம் ஆண்டில் 57,622 ஆக இருந்த வெளிநாட்டு சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை 2022 ஆம் ஆண்டில் 4,07,139 ஆகவும், 2023 ஆம் ஆண்டில் 11,74,899 ஆகவும் உயர்ந்துள்ளது. தமிழ்நாட்டிற்கு தற்போது 2024 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் ஜூலை மாதம் வரை 7,24,318 வெளிநாட்டு சுற்றுலா பயணிகள் வருகை தந்துள்ளார்கள்.

இதேபோன்று உள்நாட்டு சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை 2021 ல் 11,53,36,719 ஆக இருந்து 2022 ல் 21,85,84,846 ஆகவும், 2023 ல் 28,60,11,515 என உயர்ந்துள்ளது. தற்போது தமிழ்நாட்டிற்கு 2024 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் ஜூலை மாதம் வரை 17,96,27,146 உள்நாட்டு சுற்றுலா பயணிகள் வருகை தந்துள்ளார்கள்.

பிரான்ஸ் நாட்டின் தலைநகரான பாரிஸ் நகரில் 17.9.2024 தொடங்கி 19.9.2024 வரை நடைபெற உள்ள புகழ்பெற்ற ஐஃப்டிஎம் டாப் ரேசா 2024 ( IFTM TOP RESA 2024) சுற்றுலா வர்த்தக கண்காட்சியில் தமிழ்நாடு சுற்றுலாத்துறையின் அரங்கம் அமைக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டின் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை ஆகிய ஐந்து வகை நிலப்பகுதிகளில் அமையப்பெற்ற புகழ் பெற்ற சுற்றுலாத்தலங்களை விளக்கும் வகையிலான அரங்கத்தில் தமிழ்நாட்டின் கலாச்சாரத்தினை பிரதிபலிக்கும் வகையில் ஜல்லிக்கட்டு காளை மற்றும் காளையை தழுவி நிற்கும் வீரனின் சிலை காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டின் சுற்றுலாத்தலங்களின் சிறப்புகளை பிரஞ்சு மொழியில் விளக்கங்களுடன் தெரிவிக்கும் புகைப்படங்கள் அடங்கிய புத்தகத்தினை சுற்றுலாத்துறை அலுவலர்கள் அரங்கத்திற்கு வருகை தந்த சுற்றுலா பயணிகள் மற்றும் சுற்றுலா தொழில் முனைவோர்களிடம் வழங்கினர். இந்த அரங்கத்தை ஏராளமான வெளிநாட்டு சுற்றுலா பயணிகளும், சுற்றுலா தங்கும் விடுதி துறையினர், சுற்றுலா பயண ஏற்பாட்டாளர்கள் பார்வையிட்டு தமிழ்நாட்டின் சிறப்புகளை அறிந்தனர்.

இந்நிகழ்ச்சியில் இந்திய சுற்றுலாத்துறை உதவி இயக்குநர் மோனிகா ஜாம்வால், இந்திய தூதரக அலுவலர்கள், சுற்றுலாத் துறை அலுவலர்கள், சுற்றுலாத் தொழில் முனைவோர்கள் கலந்து கொண்டனர்.

# வடக்கு மண்டல பொறியாளர் அணி நிர்வாகிகள் ஆய்வுக் கூட்டம்!

## துரை கி.சரவணன் - டி.கே.பி.கருணாநிதி - நிர்வாகிகள் பங்கேற்பு!

சென்னை, செப். 20-

கழகத் தலைவர் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், கழக இளைஞர் அணி செயலாளர், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோரது ஆணைக்கிணங்க நேற்று முன்தினம் வடக்கு மண்டல பொறியாளர் அணியின் மண்டல ஆய்வு கூட்டம் திருவள்ளூர் மத்திய மாவட்டத்தில் நடைபெற்றது. இதில் முன்னாள் அமைச்சர் திருவள்ளூர் மத்திய மாவட்டச் செயலாளர் ஆவடி சா.மு. நாசர், திருவள்ளூர் கிழக்கு மாவட்ட செயலாளர் கும்மிடிப்பூண்டி சட்டமன்ற உறுப்பினர் டி.ஜெ.கோவிந்தராஜன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

மாநில பொறியாளர் அணி தலைவரும் முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான துரை கி.சரவணன்,

மாநில பொறியாளர் அணி செயலாளர் எஸ். கே.பி. கருணாநிதி, மாநில பொறியாளர் அணி துணைத் செயலாளர்கள் ஈ.ரா நரேந்திரன், உமா காந்த், சி. பிரதீப் இ.ரா. பரமேஷ் குமார் ஆகியோர் ஆலோசனை வழங்கி பேசினர்.

இக்கூட்டத்தில் திருவள்ளூர் மத்திய மாவட்ட அமைப்பாளர் திண்ணனூர் மோகன் வரவேற்றுப் பேசினார்.

திருவள்ளூர் கிழக்கு மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் ஆரணி எஸ்.ரோஸ் பொன்னையன், மாவட்ட தலைவர் பிரசாந்த், துணைத் தலைவர் துளசிராமன் மற்றும் தமிழ் பிரியன், காண்டீபன், மணிகண்டன் கோகுல்நாத், தேவராஜ், கௌரி சங்கர், பிரபாகர், விக்கி உள்ளிட்ட சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர் மாவட்டங்களின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் கலந்துகொண்டனர்.



ஜப்பான் தலைநகர் டோக்கியோவில் தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா ஆகியோரின் பிறந்தநாள் கொண்டாடப்பட்டது. இதில் திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி, எம்.எம். அப்துல்லா எம்.பி., மற்றும் ஜப்பான் நாட்டின் தி.மு.க. அயலக அணி நிர்வாகிகள் பங்கேற்றனர்.



உத்தரகாண்ட் மாநிலத்தில் சமீபத்தில் ஏற்பட்ட நிலச்சரிவில் சிக்கி, தமிழ்நாடு அரசின் துரித நடவடிக்கைகளால் பாதுகாப்பாக மீட்கப்பட்டு இரயில் மூலம் சொந்த ஊருக்கு திரும்பிய தமிழர்களை வேளாண்மை – உழவர் நலத் துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத் துறை அமைச்சர் செஞ்சி கே.எஸ். மஸ்தான், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வி. கணேசன் ஆகியோர் நேற்று முன்தினம் (18.09.2024) சென்னை எழும்பூர் இரயில் நிலையத்தில் வரவேற்றனர்.